182—

தொழிற்சாலைகள்

***2163—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகளைத் தொடங்க தகுந்த தொழில் முனைவோர், தொழிற்சாலை நிறுவுவதற்கு நிலங்கள் மற்றும் திட்ட அறிக்கையோடு வருகை தந்தால், டிட்கோவுடன் இணைந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி புதிய தொழிற்சாலை தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் எக்டர் நிலத்தில் இரப்பர் பயிரிடப்பட்டு, வருடத்திற்கு 50,000 டன்னுக்கு மேலாக இந்தியாவிலேயே முதல் தரமான இரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த கால அரசு தோவாளை தாலுகாவிலே, செண்பகராமன்புதூர் என்ற கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் இரப்பர் பூங்கா அமைக்க ஏற்பாடு செய்தது. இரப்பர் போர்டும் சுமார் 16 கோடி ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். ஆனால், அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இது மாவட்ட மக்களின் வாழ்க்கைக்கு ஜீவாதாரமாக விளங்கக் கூடியது. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடியது. எனவே, அங்கு கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 5% இரப்பர்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. பக்கத்திலே இருக்கின்ற கேரளாவில் 90% இயற்கை இரப்பர் உற்பத்தியாகிறது. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டு டிட்கோவுடன் இணைந்து அங்கு ஒரு இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். கேள்வி நேரத்தில் குறை சொல்லக் கூடாது என்பது விதி. கடந்த காலத்தில் உங்களோடு தோழமையாக இருந்து, உங்களுக்கு ஆதரவாக இருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, கடந்த 2008 ஆம் ஆண்டு அதை இரத்து செய்துவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அனுமதியைப் பெற்று, மீண்டும் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையை இந்த ஆண்டே அமைத்துத் தருவீர்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுக் காலமாக, உங்கள் ஆதரவோடு ஆட்சி நடத்தியவர்களை விட்டுவிட்டு, இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையிலே நீங்கள் அதைச் சொல்லியிருக்கின்றீர்கள். நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதிக்குட்பட்ட வடக்கு பொய்கைநல்லூர், தெற்கு பொய்கைநல்லூர், பிரதாபராமபுரம்,*

இராமேஸ்வரம், விழுந்தமாவடி, புதுப்பள்ளி, வேட்டைக்காரன் இருப்பு ஆகிய கடலோரக் கிராமங்களில் அதிகமான அளவில் மாங்காய் விளைவிக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்தி வேட்டைக்காரன் இருப்பு கிராமத்தில் மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கேள்வி ஊரகத் தொழில் துறைக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் முந்திரிக் காடுகள் அதிகமாக இருப்பதால், முந்திரி சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் 'தானே' புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் ஏற்கெனவே முந்திரி தொழிற்சாலை இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

2012 ஏப்ரல் 27]

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பருப்பு பதப்படுத்துதல் (Dhal Processing) மற்றும் உணவு எண்ணெய் (Edible Oil) உற்பத்திக்கு முதலிடத்தில் வர வாய்ப்புள்ள விருதுநகரை மையப்படுத்தி (Industrial Cluster) தொழிற்கொத்து அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இரப்பர் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்பது. இருந்தாலும் விருதுநகரில் பருப்பு பதப்படுத்துதல் மற்றும் எண்ணெய் உற்பத்தி ஆகியவற்றுக்கு ஒரு Industrial cluster ஆரம்பிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்றார்கள். அங்கு ஏற்கெனவே சிறப்புப் பொருளாதார மண்டலம் இருக்கின்றது. அங்கு ஆரம்பித்துக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் ஒரு திட்டம் தந்து நல்லாட்சி நடத்திவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கின்ற நம் புரட்சித் தலைவரின் 1982 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், வாணியம்பாடி தொகுதி, நாட்றாம்பள்ளி ஒன்றியத்திலே சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலை தொடங்கப்பட்டது. பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்த சந்தன ஆலையை மூடிவிட்டது. எனவே, மீண்டும் சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலையைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு வருகின்றது. எனவே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தளி தொகுதிக்கு உட்பட்ட தேன்கனிக்கோட்டை, கிளமானம் போன்ற பகுதிகளிலே கனிம வளத் துறைக்குச் சொந்தமான கல் குவாரிகள் இருக்கின்றன. அங்கே பாரடைசோ, பால் பாரடைசோ, மல்ட்டி கலர், பிளாக் கிரானைட் போன்ற வண்ண கிரானைட் கற்கள் கிடைக்கின்றன. அங்கு அரசாங்கத்தின் சார்பாக கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலையை அமைத்தால், அந்தப் பகுதியிலே உள்ள உள்ளூர் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அரசின் சார்பாக அங்கே கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களால் மாதேபள்ளியில் இதுபோன்ற கிரானைட் பாலீஷ் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு, நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுபோன்ற கிரானைட் கற்கள் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மேலும் புதியதாக ஒரு தொழிற்சாலை துவக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

2012 ஏப்ரல் 27]

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதியிலே, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே, கரும்புச் சக்கை மூலமாக காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் முதலீடு வேண்டும். இதற்குக் கொள்கை முடிவு எடுக்கக்கப்பட வேண்டியிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில் SIPCOT Phase-I, Phase-II என்று இருக்கிறது. SIPCOT Phase-I-லே, BHEL போன்ற பெரிய நிறுவனங்கள், தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால், சிப்காட் Phase-II-லே நிலவள வங்கி மட்டும் செயல்படுகிறது. அங்கு பெரிய தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. ஆகவே, BHEL அமைந்துள்ள Phase-II இடத்திலே, மிக அதிகமான நிலம் இருக்கின்ற காரணத்தினால் அங்கு புதிய பெரிய தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் மூலமாக நிலம் கையகப்படுத்திக் கொடுப்பதுதான் அரசின் வேலை. தொழில் தொடங்குவதற்காக முனைவோர்கள் யாராவது முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அரசு வழிகாட்டுதலின்படி, புதிய தொழிற்சாலை

அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நிலவள வங்கி இருக்கின்ற காரணத்தினால், புதிய தொழிற்சாலை துவக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள். நிறைய உறுப்பினர்கள் கேட்கவேண்டியுள்ளது. இரப்பர் மாதிரி இழுத்துவிடாதீர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், தமிழக முதலமைச்சர், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தனித் தொகுதியிலே இதுவரையில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. எனவே, புதிய தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தவாசி தொகுதியில் ஒரு புதிய தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். புதிய தொழிற்சாலை அமைப்பதற்குக் சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதியில் சிமென்ட் தொழிற்சாலைக்குத் தேவையான மூலக்கூறுகள் கிடைக்கின்றன. அதேபோல், அங்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காலி நிலங்களும் இருக்கின்றன. எனவே, அங்கு ஒரு சிமென்ட் தொழிற்சாலை ஏற்படுத்தித் தர, அரசு முன்வருமா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு சிமென்ட் ஆலைகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே சுண்ணாம்புக் கல் கிடைக்கின்ற காரணத்தினால், புதிய சிமென்ட் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். பக்கத்திலே ஆலங்குளத்திலே ஒரு சிமென்ட் ஆலை இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதற்கிணங்க, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

183—

தேனீ வளர்ப்புப் பண்ணை

***6347—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் பகுதியில் தேனீ வளர்ப்புப் பண்ணை அமைத்து பழங்குடியினரின் வளர்ச்சிக்கு உதவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

தற்போது தேனீ வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின்வசம் இல்லையென்றாலும், பழங்குடி மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு உறுப்பினருடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பின், தேவைப்படின், தேனீ